உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்



# தமிழ் வளர்ச்சிப் பாதையில் அடிகளாரும் ஆறுமுகநாவலர் பெருமானும்

**எம்.ஜெயராமசர்மா**

**தமிழ்மொழிக் கல்வி இயக்குநர் , விக்டோரியா இந்துக்கல்வி மையத்தின் ஆலோசகர், மெல்பேண், அவுஸ்திரேலியா.**

வைரமும், முத்தும் வாய்த்துவிட்டால் வாழ்வில் பெருமகிழ்ச்சி அல்லவா! வடக்கில் வைரமாய் நாவலர் பெருமானும், கிழக்கில் முத்தென சுவாமி விபுலானந்த அடிகளாரும் தமிழுலகில் ஒளிவிட்டுப் பிரகாசித்தார்கள். ஈழத்தில் இவர்கள் பிறந்தாலும் இன்பத்தமிழை இன்னுயிராய் எண்ணி தமது வாழ்வினையே அர்ப்பணித்தார்கள் என்பதால்தான் அன்று தொடக்கம், இன்றுவரை ஏற்றிப் போற்றப்படுகிறார்கள் எனலாம். தமிழ் வளர்ச்சிப் பாதையில் இருவர் வாழ்ந்த காலங்களும் வேறுபட்ட காலமாக இருந்த பொழுதும் - இருவரது சிந்தனைகளும், செயற்பாடுகளும் தமிழாகவே அமைந்திருந்தது என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். இருவருமே இல்லறத்தைத் துறந்தாலும் நல்ல நம் தமிழ்மொழியைத் துறக்கவில்லை என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். அல்லும், பகலும் தமிழ் பற்றிச் சிந்தித்தார்கள். தம் காலத்தில் தமிழுக்கு என்ன செய்தால் தகும் என்று சிந்தித்தார்கள். மற்றவர் சிந்திப்பதைவிட வித்தியாசமாகச் சிந்தித்தார்கள். சிந்திப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அவற்றுக்குச் செயல்வடிவமும் கொடுத்து நின்றார்கள். இப்பேரறிஞர்களை ஒப்பு நோக்கி இவர்களது ஆற்றல்கள் தமிழ் வளர்ச்சிப் பாதையில் பயணித்த விதத்தினை ஆராய்வதே இங்கு முக்கிய நோக்காக அமைகிறது எனலாம்.

## பிறப்பும் சூழலும்

இருவரது பிறப்பும் கோவிலை அண்டியே அமைகிறது. நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிற் சூழலில், நாவலர் பெருமான் பிறக்கிறார். கிழக்கு இலங்கையில் காரைத்தீவில் கண்ணகை அம்மன் கோவிலின் அயலில் விபுலானந்த அடிகளார் பிறக்கிறார். இருபெரும் தமிழ் அறிஞர்களுமே இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஆலயங்கள் அருகிலேயே அந்தச் சூழலிலே பிறந்தார்கள் என்பது நோக்கத்தக்கதாகும். கருவிலே திருவினை இவர்கள் இருவரும் பெறுவதற்கு

இவர்களது குடும்பங்கள் ஆலயச்சூழலில் வசித்தமையும் ஒரு முக்கிய காரணியாக இருந்திருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறதல்லவா? இருவருமே தமிழினை மூச்சாக்கி செயற்பட்ட வேளை இருவருக்கும் அடிநாதமாக ஆன்மீகம் அமைந்திருந்தது என்பது உற்று நோக்கத்தக்கதாகும். இவர்களின் தமிழ் பற்றிய நோக்கில் சமயமும் கலந்தே வந்திருக்கிறது என்பதையும் கண்டு கொள்ளலாம். இறைச் சிந்தனை இவர்களிடம் நிறைந்து காணப்பட்ட காரணத்தால் இவர்களின் பணிகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எல்லோருக்கும் பயனினையும் ஈய்ந்து நின்றது எனலாம். இவர்களின் பெற்றோர்கள் கடவுள் பக்தி நிறைந்தவர்களாய், ஆசாரசீலராய், சமூக மதிப்பு மிக்கவராய், கல்வி கேள்விகளில் பெரு நாட்டமும், ஆற்றலும் மிக்கவர்களாய் விளங்கியமையும் இவர்களின் ஊக்கத்துக்கும், ஆக்கத்துக்கும் உரமாய் அமைந்தது என்று கூட எடுத்துக் கொள்ளலாம். ஒருவரை உருவாக்குவதில் சூழலின் பங்கும் முக்கியத்துவம் பெறுகிறது. மொழி பற்றியும், சமயம் பற்றியும், சமூகம் பற்றியும், ஆராய்ச்சி பற்றியும், சிந்திக்கும் திறனை இவர்கள் இருவரது குடும்பச்சூழல் ஏற்படுத்திக் கொடுத்தே இருக்கிறது. நல்ல குடும்பம், நல்ல சூழல், நல்ல முறையில் அடிகளாரையும், நாவலர் பெருமானையும் உருவாக்கி எமக்கு முத்தாயும், வைரமாயும் கொடுத்திருக்கிறது.

1822 இல் நாவலர் பெருமான் பிறக்கின்றார். அவர் பிறந்து எழுபது ஆண்டுகளின் பின்னர்தான் அதாவது 1892 இல் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறக்கின்றார். நாவலர் பெருமான் 57 வருடத்துடனும், அடிகளார் 55 வருடத்துடனும் இவ்வுலகை விட்டுச் சென்று விடுகின்றனர். இருவருமே அரை நூற்றாண்டு காலம் அன்னைத் தமிழை அரவணைத்து ஆராய்ச்சி செய்து தமிழ் வளர்ச்சிப் பாதையில் பயணித்திருக்கிறார்கள்.

## கல்விப்பாதை

தாய் மொழியில்தான் ஒரு பிள்ளை தனது கல்வியைத் தொடங்க வேண்டும். அப்பொழுதுதான் அதன் ஆற்றல்கள் விருத்தி அடையும் என்று கல்வி உளவியல் அறிஞர்கள் அறிவுறுத்துகிறார்கள். அதன் வழியில் அடிகளாரும், நாவலர் பெருமானும் ஆரம்பத்தில் தாய்மொழிக் கல்வியினைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். நாவலர் பெருமானின் தமிழ் ஆர்வத்துக்கு அவரது குடும்பமே காரணமாகிறது. அவரின் தந்தையார் நல்ல தமிழ்ப் புலமை மிக்கவராய் இருந்திருக்கிறார். ஐந்து வயதில் வித்தியாரம்பம் செய்யப்பட்டு நல்லூர் சுப்பிரமணிய ஆசிரியரிடமும், சரவணமுத்துப் புலவரிடமும், சேனாதிராய முதலியாரிடமும் நாவலர் பெருமானின் ஆரம்பக்கல்வி தாய்மொழியில் மிகவும் சிறப்பாக ஊன்றப்படுகிறது. இவையாவுமே திண்ணைப் பள்ளி முறையிலேயே அமைந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அடிகளாரும் தமிழையே ஆரம்பக் கல்வி ஆக்குகிறார். வித்தியாரம்பம் செய்யப்பட்டு, கிராமப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தமிழிலே கல்வியைக் கற்கின்றார். நாவலர் கால திண்ணைப் பள்ளிக்கூடம், அடிகளார் காலத்தில் கிராமப் பாடசாலை ஆகின்றது. குஞ்சித்தம்பி ஆசிரியர் அடிகளாருக்கு எழுத்தறிவித்த இறைவனாகின்றார். அடிகளாரின் தந்தையார் தமிழ் ஆர்வமும், கற்றலில் நாட்டமும் உடையவராய் இருந்தமையால் தமது பிள்ளைக்கு வீட்டிலும், தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஆசிரியர்களைக் கொண்டு சொல்லிக் கொடுக்கின்றார். வடக்கின் வைரமும், கிழக்கின் முத்தும் இளமையில் தமிழில் கற்று-நீதி நூல்களையும், இலக்கிய, இலக்கணங்களையும் பிஞ்சு மனத்தில் இருத்திக் கொள்ளுகிறார்கள். பிஞ்சுமனத்தில் ஊன்றப்பட்ட தமிழ் வித்து, பின்னர் தமிழ் வளர்ச்சிப் பாதைக்கே பெரு விருட்சமாய், ஆறுதலாய் அமையப் போகின்றது என்பதை அடிகளாரும் நினைத்திருக்க மாட்டார். ஆறுமுக நாவலர் பெருமானும் நினைத்திருக்கவே மாட்டார்கள். அவர்கள்கூட இருந்தவரோ, படிப்பித்த ஆசிரியரோ, படித்த நண்பர்களோகூட நினைத்திருக்கவே மாட்டார்கள். ஆனால், இறைவன் மட்டும் நினைத்த படியால்தான் இப்பெருமக்கள் தமிழ் வளர்ச்சிப் பாதையில் தடம் பதித்திருக்கிறார்கள் எனலாம். அடிகளார் பத்துவயதில் ஆங்கிலப் பாடசாலைக்குச் செல்கிறார். நாவலர் பெருமான் பனிரெண்டு வயதிலே ஆங்கிலம் படிக்கச் செல்லுகிறார். இருவரும் கிறிஸ்தவச் சூழலில்தான் கல்வி பயிலுகிறார்கள். படிப்பில் இருவருமே ஆர்வம் மிக்கவர்களாகவே விளங்குகிறார்கள். சுவாமி அவர்களின் கல்வி கல்முனையில் ஆரம்பித்து, மட்டக்களப்பு கிறிஸ்தவப் பாடசாலைவரை தொடர்கிறது. நாவலர் பெருமான் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்கிறார். நாவலர் பெருமானுக்கு பீற்றர் பேர்சிவல் பாதிரியார் வழிகாட்டியாக விளங்கியது போல, அடிகளாருக்கு போணல் சுவாமிகள் உறுதுணையாய் அமைகின்றார்.

நாவலர் பெருமான் தமிழில் பாண்டித்தியம் பெற்றதோடு ஆங்கிலம், வடமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். அடிகளாரும் நாவலர் பெருமான் போன்று ஆங்கிலம், வடமொழிப் புலமை பெற்றிருந்தார். அதற்கு மேலாகவும், சிங்களம், அரபு, கிரேக்கம், லத்தீன் ஆகிய மொழிகளிலும், ஆற்றல் மிக்கவராய் இருந்தமை நாவலர் பெருமானைவிட இவரை வேறுபடுத்திக் காட்டக் கூடியதாக இருக்கிறது எனலாம். அத்துடன் விஞ்ஞான, கணித அறிவிலும் அடிகளார் நாவலர் பெருமானைவிட முந்தி இருக்கிறார் என்பது நோக்கத் தக்கதாகும்.

அடிகளார் கொழும்பு ஆசிரிய கலாசாலைப் பயிற்சி, அரசு பொறியியற் கல்லூரி விஞ்ஞான பட்டயப் படிப்பு, மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதர் பட்டம், இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான இளங்கலைப் பட்டம் ஆகிய கல்விப் பட்டங்களைத் தனதாக்கிக் கொள்ளுகிறார். நாவலர் பெருமான், இவ்வழிகளில் செல்லாது வரன்முறைத் தமிழ்க் கல்வியோடும், அக்கால ஆங்கிலக் கல்வியோடும், வடமொழிக் கல்வியோடும் நின்றுவிடுகிறார். இருவருமே தாம் தாம் கற்ற பாடசாலைகளில் ஆசிரியராய் கடமை ஆற்றியிருக்கிறார்கள். இருவருமே தமது

வழிகாட்டிகளாய் அமைந்த கிறிஸ்தவ சுவாமிமாரின் அன்புக்கும், மதிப்புக்கும் உரியவர்களாயும் இருந்திருக்கிறார்கள். இருவருமே மொழியியலில் மிகுந்த நாட்டமும், திறனுமுடையவராய் விளங்கி இருக்கிறார்கள் என்பது மிகவும் நோக்கத்தக்க விடயமாகும்.

நாவலர் பெருமான் வட இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுடன் தமிழால் தொடர்பு கொள்ளுகிறார்கள். அடிகளார் கிழக்கு இலங்கையிலிருந்து வட இலங்கை வந்து அங்கு பாடசாலை ஆசிரியராய், அதிபராய் இருந்த பின்னர் தமிழ் நாட்டுடன் சங்கமம் ஆகிறார். அடிகளாரின் கல்விப் பயணத்தில், தமிழ்ப் பயணத்தில் வட இலங்கை நல்லதொரு தாக்கத்துக்கு வழிவகுத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அடிகளார் வட இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாசம் செய்த காலத்தில்தான் அவர் இலண்டன் பட்டப் படிப்பை நிறைவு செய்து விஞ்ஞானப் பட்டதாரியாகிறார். அதுமட்டுமல்ல ஆரிய திராவிடபாஷா சங்கத்துடனும் நெருக்கமாகிறார். பல சைவத் தமிழ் அறிஞர்களது நட்பினையும் பெற்றுக் கொள்ளுகின்றார். கிழக்கின் முத்து - வடக்கின் வைரம் ஒளிவீசிய இடத்துக்கு வந்ததன் விளைவாக வைரத்தின் வீரியமும், முத்துடன் இணைந்து முத்தமிழின் வித்தகராய் முதல்தமிழ்ப்பேராசிரியராய் அடிகளாரை உலகம் பார்த்து வியந்திடச் செய்தது என்றுகூட எடுத்துக் கொள்ள முடிகிறதல்லவா!.

## சமூக நிலைப்பாடும் தமிழ்ப் பணிகளும்

நாவலர் பெருமானும், அடிகளாரும் வாழ்ந்த காலம் அன்னியர்கள் எமது நாட்டினை ஆட்சிபுரிந்த காலமாகும். அன்னிய மதமும் அவர்களின் எண்ணங்களும் அரங்கேறிய காலமாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர், தொடர்ந்து ஆங்கிலேயர் என்று அன்னியர்கள் இந்தியாவையும், இலங்கையையும் தம்வசம் வைத்திருந்த காலமாகும். இவர்களின் ஆட்சியில் சுதேசிய மதங்களும், சுதேசிய மொழிகளும், சுதேசப் பண்பாடுகளும் எள்ளி நகையாடப்படும் நிலை காணப்பட்டதெனலாம். அன்னிய மாயைதனில் அநேகர் சிக்குண்டு அவதிக்கு ஆளான காலமாகவும் இக்காலம் அமைந்திருந்தது என்பது முக்கியமாகும்.

சமூகத்தில் வாழ்கின்றவர்கள் இருப்பதை அனுசரித்து வாழ்கின்றவர்கள் ஒருவகை. எதையுமே பார்க்காது புறந்தள்ளி வைத்துவிட்டு வாழுகின்றவர்கள் ஒருவகையினர். ஆனால் சமூகத்தில் வேண்டாதவற்றை எதிர்த்து தமக்குச் சரியெனப் பட்டதற்காக முன்னேவந்து எதிர்த்துச் செயற்படுபவர்கள் ஒரு வகையினர். இதில் மூன்றாவது நிலையில்தான் நாவலர் பெருமானும் அடிகளாரும் வருகிறார்கள் எனலாம். தமது மொழி பற்றிய சிந்தனையை, மொழியின் வளர்ச்சி பற்றிய சிந்தனையை, எப்படியெல்லாம் தமிழ் மொழியினைக் கொண்டு சிறப்பாக்கலாம் என்ற சிந்தனையை, அக்காலச் சூழலே தீர்மானிக்க வைத்திருக்கிறது என்பது இங்கு யாவரும் மனமிருத்த வேண்டிய முக்கிய விடயம் எனலாம்.

நாவலர் வாழ்ந்த யாழ்ப்பாணச் சூழலில் ஆங்கிலக்கல்வியும், கிறிஸ்தவ மதமும் ஆட்சியாளரின் அரவணைப்பில் இருந்த காலமாகும். ஒரளவுக்கு வசதி படைத்தவர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பாடசாலைகளில் சேர்த்து ஆங்கிலத்தைப் படிக்கச் செய்து அரசாங்க உத்தியோகங்களில் அமரச் செய்தால் அதுவே பேரானந்தம் என்று எண்ணி இருந்த காலமாகும். இதனால் தாங்கள் சார்ந்த சமயத்தையோ, தங்கள் தாய் மொழியினையோ எண்ணிப் பாரா நிலையே அங்கு காணப்பட்டது. அதேவேளை பெரும்பாலான பாமர மக்கள் கிராமப் புறத்திலும், நாட்டுநிலை விளங்காதவராயும், கல்வி அறிவு குறைந்தவராயும், காணப்பட்டார்கள். இந்த நிலையினை ஆளவந்த அந்நியர் தமக்குச் சாதகமாக்கி - இலவச சலுகைகளை அவர்களுக்குக் காட்டி அவர்களைச் சுயமாகச் சிந்திக்கவிடாமல் செய்யும் முயற்சியில் அல்லும், பகலும் அமைப்பாக முனைப்புடன் செயற்பட்டார்கள். இதனைப் பார்த்த நாவலர் பெருமான் - எங்களின் பாரம்பரியத்தைக் காப்பாற்ற - அந்தக் காலத்துக்கு எந்த வழி உகந்ததோ, அதனை மனத்திருத்தி தனது தமிழ் வளர்ச்சிப் பாதையினை வகுத்துக் கொண்டார்.

நாவலர் பெருமானின் வழியானது சைவசமயம் வழிசார்ந்து தமிழ் வளர்ப்பதாக அமைவதை அவரின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கண்டு கொள்ள முடிகிறது என்று அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். சைவ சமயத்தின் குரவராக நாவலர் பெருமான் போற்றப்படுகிறார். தமிழும், சைவமும் நாவலர் பெருமானின் இருகண்கள் என்று அறிஞர்கள் விதந்து போற்றுவார்கள். "நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே" என்னும் வாக்கு நாவலரின் பணிக்கு நல்ல ஒரு சான்றாகி நிற்கிறதல்லவா!

கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், இவற்றையே அவர் கையில் எடுக்கிறார். இவற்றுக்கு வசனமாய் தமிழில் உரை எழுதுகிறார். சைவ வினாவிடையை தமிழிலே எழுதுகிறார். சைவப் பாடசாலைகள் நிறுவ முயலுகிறார். கோவில்களில் புராண விரிவுரைகள் ஆற்றுகிறார். புராணங்களுக்குப் பயன் சொல்லும் முறையினைப் பரவிடச் செய்கிறார். புராணத்துக்குப் பயன் சொல்லும் பொழுதெல்லாம் தமிழ் இலக்கியங்கள் இலக்கணங்கள் யாவும் அவற்றின் ஊடாக யாவரிடமும் போய்ச் சேரச்செய்து நின்றார்.

1849 ஆம் ஆண்டு ஆறுமுகம் என்னும் பெயர் கொண்டவர் தமிழ்நாடு செல்லுகிறார். திருவாவடுதுறை ஆதீனத்தில் உரை ஆற்றுகிறார். அவரின் நாவன்மை யாவராலும் போற்றப்படுகிறது. ஆறுமுகமாய் இருந்தவர் அன்று தொடக்கம் "ஆறுமுக நாவலர்" ஆகி தமிழுலகு ஏற்றி நிற்கும் பெருமைக்கு உரியவராகி விடுகிறார். சைவத் தமிழ் நூல்களை அச்சிடுவதற்கு அச்சு இயந்திரம் வாங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு சென்றவர் "நாவலர்" பட்டத்துடன் இலங்கை வருகிறார். தான் தேர்ந்தெடுத்த சைவத் தமிழ் நூல்களையும், தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களையும் அச்சிட்டு வெளியிட நாவலர் எடுத்த முயற்சி அவரின் தமிழ் வளர்ச்சிப் பாதையில் மிகவும் முக்கிய அம்சமென்றே கருதலாம். சிதம்பரத்தில் அச்சுக்கூடம் நிறுவி பல நூல்களை வெளிக்கொணர்ந்தார், அத்தோடு நில்லாமல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலும் அச்சுக்கூடத்தை ஆரம்பித்து, தமிழ் சைவ

நூல்களையும், மாணவர்கள் படிப்பதற்கான பாலபாடப் புத்தகத்தையும், பெரியபுராண, கந்தபுராண, திருவிளையாடற் புராண வசன நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார். தமிழ் ஏடுகள் பலவற்றைப் பரிசோதித்து எழுத்துப் பிழைகள் இல்லாமல் பழந்தமிழ் நூல்களை நாவலர் பெருமான் அச்சுவாகனமேற்றி அனைவரும் பயன் பெறுவதற்குப் பெருமுயற்சிகள் செய்திருக்கிறார்.

அகத்தியர் அருளிய தேவாரத்திரட்டு நூல் தொடக்கம் விநாயககவசம் நூல் வரை நாவலரின் கையூடாக எழுதியும், அச்சாகியும் வந்தன எனும் வகையில் அறுபது நூல்களைக் காணமுடிகிறது. நன்னூல் விருத்தி உரை, காண்டிகை உரை, இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, இலக்கணம் படிப்பார்க்கு என்றுமே கைகொடுக்கும் நாவலர் பெருமானின் நற்கொடை எனலாம். சாதாரண மக்களும் விளங்கும் வகையில் தமிழ் உரைநடையினை கையாண்டு வெற்றிகண்டவர் நாவலர் பெருமான். இதனால்தான் "வசனநடை கைவந்த வல்லாளர்" என்று இன்றும் போற்றப்படுகின்றார்.

பன்மொழி அறிவாளியான நாவலர் பெருமான் தமிழ் வளர்ச்சிப் பாதையில் தனக்கென ஒரு வழியினை வகுத்துக் கொண்டார். ஏட்டிலிருந்த பழந்தமிழ் இலக்கிய, இலக்கண, சமயம் சார்ந்த நூல்களைக் கண்டெடுத்து அவற்றை யாவரும் படித்துப் பயன் அடையும் வண்ணம் காலம் காலமாய் இருக்கும்படி அச்சுவாகனம் ஏற்றி புத்தகநிலைக்குக் கொண்டுவந்தார். படிப்பவர்கள் ஐயம் இன்றி படிப்பதற்கு அரிய தெளிவான விளக்க உரைகளையும் அந்தப் புத்தகங்களில் இடம் பெறச் செய்தார். எழுத்துப் பிழை என்னும் அரக்கனைத் தேடித் தேடி இல்லாமலேயே தனது பதிப்புகளை வெளிக் கொணர்ந்தார். பாடசாலைகளை நிறுவி நல்லதோர் பாடத்திட்டத்தை தயாரித்து யாவரும் கல்வி அறிவு பெறவேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் ஓயாது உழைத்து நின்றார். எழுத்தாலும், பேச்சாலும், தமிழ் வளர என்னவெல்லாம் தனது ஆற்றலுக்குச் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் நாவலர் பெருமான் செய்திருக்கிறார் என்றுதான் கருதமுடிகிறது.

நாவலர் பெருமானின் காலச்சூழலில் அவரால் எதைச் செய்யமுடியுமோ, அதனையே அவர் தனது செயற்பாடாக எடுத்துக் கொண்டார். நாவலர் பெருமானின் குறிக்கோள் சைவம் தன்னிலை இழந்து போகாமல் எப்படிக் காப்பாற்றுவது? அதற்கு என்ன செய்யலாம்? என்னும் அடிநாதமே அவரின் உட்கிடையாக இருந்ததாலும், தாய்மொழியான தமிழின் நிலை தளர்வு பெறும் நிலை காணப்பட்ட படியாலும், சைவத்தின் ஊடாகத் தமிழ்ப்பணியினை மேற்கொள்ளும்படி அமைந்தது. அதே வேளை தமிழின் பாலும் நாவலர் பெருமான் தணியாக் காதல் கொண்டே இருந்திருக்கிறார் என்பது - தமிழ் பற்றி அவர் எடுத்த நடவடிக்கைகள் எமக்கெல்லாம் புலப்படுத்தி நிற்கின்றன.

அடிகளாரின் காலமும் அன்னிய ஆட்சி இருந்தகாலமே ஆகும். நாவலர் பெருமான் சிந்தனையும், அவரின் செயற்பாடும் அடிகளாரின் தமிழ் வளர்ச்சிப் பாதையிலே நாம் கண்டு கொள்ள முடியாது. நாவலர்பெருமான் சூழல் அவரை

அவ்வாறு செய்யத் தூண்டியது. ஆனால் அடிகளாரின் நோக்கும், செயற்பாடுகளும் அவரின் சிந்தனைக்கு ஏற்றாற் போன்றுதான் அமைந்தது. சமயவாதியாக அடிகளார் இருப்பினும் அவரின் தமிழ்ப்பாதை தமிழாகவே அமைந்தது. நாவலர் பெருமான் சமயத்தை இறுக்கிப் பிடித்து நின்று தமிழை அதனுடன் இணைத்த நிலையினை அடிகளாரிடம் காணமுடியவில்லை. அதற்கு அவர்சார்ந்திருந்த இராமகிருஷ்ண அமைப்பும் ஒரு காரணமாய் இருக்கலாம் அல்லவா! அடிகளாரின் மனத்தில் சமரச நோக்குதான் நிரம்பி இருந்தது. இதனால் அவர் எவரையும் புண்படும் விதத்தில் தனது எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள விருப்பம் அற்றவராகவே விளங்கி இருக்கிறார்.

அவர் கற்ற கல்வி, அவருக்கு வாய்த்த சூழல், அவர் பார்த்த பணிகள், அவருடன் பழகிய அறிஞர்கள் வட்டம், அவரின் தமிழ்ப் பணிகளைத் தனித்துவம் ஆக்கியது என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. கிழக்கு இலங்கையிலிருந்து அடிகளார் ஆசிரியப் பணிக்காக வடஇலங்கை வருகிறார். அங்கு பல தமிழ் அறிஞர்களின் நட்பும் தமிழ் பற்றிய பல விஷயங்களும் அவருக்கு கிடைக்கின்றன. ஆசிரியராய் இருந்தவரை யாழ்ப்பாண அறிஞர்கள் கல்லூரி அதிபராக்கி பெருமைப் படுத்துகின்றனர். ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் தொடர்பு அடிகளாரின் தமிழ் வளச்சிப் பாதைக்கு நல்லதோர் உரமாய் அமைந்தது என்பதும் நோக்கத் தக்கதாகும். 1917 ஆம் ஆண்டு தொடக்கம் 1922 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் அடிகளாரின் இருப்பிடம் யாழ்ப்பாணமாக அமைகிறது. இக்காலக் கட்டத்தில் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் முத்திங்கள் வெளியீடான “கலாநிதி“ முதலாவது இதழில் அடிகளார் “பரதசாத்திரம்“ என்னும் தலைப்பில் மிகவும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றினை எழுதுகின்றார். தமிழ் பற்றிய பல ஆய்வுகளுக்கு யாழ்ப்பாணம் அடிகள் அவர்களுக்கு உந்து சக்தியாக விளங்கியிருக்கலாம் என்றும் கருதமுடிகிறது.

1922 ஆம் ஆண்டு அடிகளார் வாழ்வினில் திருப்புமுனையாக அமைந்த காலம். ஆசிரியராய் இருந்த மயில்வாகனனார் தமிழ்நாடு சென்று மைலாப்பூர் இராமகிருஷ்ண அமைப்பில் இணைந்து “பிரபோத சைதன்யர்“ என்று துறவறப் பெயரினைப் பெற்று தமது வாழ்க்கைப் போக்கினுக்கு புதுவடிவத்தை ஆக்கிக் கொள்ளுகின்றார். இரண்டு வருடங்களின் பின்னர் 1924 ஆம் ஆண்டில் “விபுலானந்தர்“ என்னும் பெயரினைப் பெற்று இராம்கிருஷ்ண மடத்தின் சன்னியாசியாகி விடுகிறார். நாவலர் பெருமான் நித்திய பிரமச்சாரி யானியானர். ஆனால் அடிகளார் சன்னியாசத்தையே பெற்றுக் கொண்டார். இருவரும் இல்லற இன்பத்தைத் துறந்தாலும் இன்பத்தமிழை மட்டும் துறக்காமல் தமக்கு ஏற்ற முறைகளில் தமிழுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றினார்கள் என்பதுதான் மிகவும் முக்கிய விசயமாகும்.

துறவியாய் இருந்த அடிகளாரின் தமிழின் ஆற்றல் கண்டு அண்ணாமலை அரசர் தனது பல்கலைக்கழத்தின் முதற்தமிழ் பேராசிரியராக வரும்படி அழைப்பு விடுத்தார். அடிகளாரும் தமிழ்ப் பேராசிரியராய் தமிழ்த்துறையின் தலைவராய்

இருந்து தமிழினை வளர்த்திடும் பாங்கில் அரிய பெரிய பணிகளையெல்லாம் ஆற்றி நின்றார். அடிகளார் இந்தியாவில் இருந்த காலத்தில் அன்னியர் ஆட்சியும் அவர்களது சிந்தனைகளும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்திய மாநிலங்களில் இருப்பவர்கள் தங்கள் தங்கள் மொழி, கலாசாரங்களைக் காக்கவேண்டும் என்னும் ஒரு எழுச்சி அக்காலத்தில் வீறு கொண்டிருந்ததை வரலாற்றால் கண்டுகொள்ள முடிகிறது. ஆங்கிலத்தைக் கற்று அதன்வழியில் அடிமைப்பட்டு நின்ற சுதேசிகளுக்கு மத்தியில் சுயத்தை இழக்க விரும்பாத பலரும் இருந்தார்கள் என்பது மிகவும் முக்கிய விசயமாகும். அவர்கள் தங்களின் மொழி பற்றி பல நடவடிக்கைகளை எடுக்கப் பேரார்வம் கொண்டு, அதன்வழியில் செல்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தமையையும் காணமுடிகிறது. இந்த நிலை தமிழ்நாட்டிலும் மேலோங்கி இருந்தது. அதாவது தனித்தமிழ் இயக்கம் என்னும் எழுச்சி அங்கு வந்துநின்றது.

அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தலைமை ஏற்றச்சூழல், தனித்தமிழ் இயக்கம் ஒலித்த காலமாதலால் அடிகளாரும் அவ்வழியில் ஈர்க்கப்பட்டார். மறைமலை அடிகளார், திரு.வி.க, பரிதிமாற் கலைஞர் போன்ற அறிஞர்களும் இன்னும் பல தமிழறிஞர்களும், தனித்தமிழ் பற்றிப் பேசியும், எழுதியும் இருந்தார்கள். இந்தநிலை அடிகளாரையும் பாதித்துவிட்ட காரணத்தால்தான் பண்டிதர்களால் ஒதுக்கப்பட்ட புரட்சிக்கவிஞர், பாரதியாரை அடிகளார் தம்வசமாக்கி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பாடத் திட்டத்தில் சேர்த்துவிட்டார். பட்டி தொட்டியெங்கும் பாரதியையும் அவரின் தமிழ் வீச்சையும் அடிகளார் கொண்டு சேர்த்தார் என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். 1943 இல் சென்னையில் தமிழ் இசைச்சங்கம் நிறுவப்படுகிறது. அண்ணாமலை அரசர் தமிழ் இசைக்குப் பெரும் பக்கபலமாகவே விளங்குகிறார். அடுத்த ஆண்டில் அதாவது 1944 ஆம் ஆண்டு தைமாதத்தில் "தமிழ் இசைக் கல்லூரி" தொடங்கப்படுகிறது. தனித்தமிழ் என்பது தமிழ்நாட்டில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிய காலம், அடிகளாரையும் தமிழில் பல்வேறு வகைகளில் சிந்தித்து ஆராய்ச்சிகள் செய்ய வழிவகுத்தது. தமிழிசை என்னும் கரு அடிகளார் உள்ளத்தில் அப்பொழுதே கருக்கொண்டு விட்டது என்றுதான் எண்ணக் கிடக்கின்றது.

பேராசிரியராய் அடிகள் இருந்த காலத்தில் பல தமிழ்ச் சங்கங்களில் தமிழின் பரிணாமங்கள் பற்றி மிகவும் நுணுக்கமான உரைகளையெல்லாம் ஆற்றி இருக்கிறார்கள். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையெல்லாம் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். மொழி, இலக்கியம் பற்றி இக்கட்டுரைகள் அமைந்திருந்தன. இந்த வகையில் அடிகளாரால் காலத்துக்குக் காலம் எழுதப்பட்ட கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக 127 கட்டுரைகள் வந்திருக்கின்றன. கட்டுரைகள் மட்டுமின்றி கவிதைகளும் அவரின் கைவண்ணத்தில் தமிழினை அழகுபடுத்தும் வண்ணம் வெளிவந்திருக்கிறது. அடிகளார் என்றதும் எல்லோரும் முன்வந்து நிற்கும் அற்புதமான கவிதை "வெள்ளை நிற மல்லிகையோ" ஆகும். ஈசன் உவக்கும் இன்மலர்களை இன்பத்தமிழுக்குக் காணிக்கை ஆக்கி அடிகளார் தமிழ்க் கவிதையுலகில் தனிமுத்திரை பதித்தவராக விளங்குகின்றார்.

தமிழ்நாட்டில் முதல் தமிழ்ப் பேராசிரியராக இருந்தது போலவே இலங்கையில் பல்கலைக்கழக வரலாற்றில் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்னும் பெருமையினையும் அடிகளாரே பெற்றுக் கொள்ளுகின்றார். இராமகிருஷ்ண மடத்தின் துறவி ஒருவர் பல்கலைக்கழகத்தில் கடமை ஆற்றியது, அடிகளாரைத் தவிர வேறு எவருமே இல்லை என்பது தமிழ் வரலாற்றில் தமிழ் வளர்ச்சிப் பாதையில் முக்கிய மைல்கல் எனலாம். வேறு எவரையும் இராமகிருஷ்ணமடம் அனுமதிக்க வில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

அடிகளாரின் விஞ்ஞானக் கணித அறிவு அவரின் தமிழ் வளர்ச்சிப் பாதையில் பல நிலைகளில் பேருதவியாய் அமைந்திருந்திருக்கிறது. அதுமட்டுமன்றி அவரின் பன்மொழி ஆற்றலும், அவரின் தமிழ் பற்றிய ஆராய்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்திருக்கிறது. அடிகளாரின் பதினான்கு கால வருட தமிழ் இசை பற்றிய ஆராய்ச்சி தமிழ் வளச்சிப் பாதைக்கு இடப்பட்ட மிகப்பெரிய வலு என்றே அறிஞர்கள் பாராட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அடிகளாரின் பௌதிக அறிவுதான் அவரின் மிகப்பெரும் ஆராய்ச்சியாய் அமைந்த தமிழ் இசை பற்றிய வெளிப்பாடாகும். 'யாழ்நூல்' என்னும் அடிகளாரின் நூலானது தமிழருக்கும், தமிழ் மொழிக்கும் கிடைத்த அரிய பொக்கிசம் என்றுதான் சொல்ல வேண்டும். விபுலானந்த அடிகளாரின் "யாழ்நூல்" அவரை பெரும் புலவராய், பேரறிஞராய், ஆராய்ச்சியின் இமயமாய் காட்டி நிற்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். தமிழ் இசையின் மேன்மையினை வெளிக்காட்டும் உயரிய பொக்கிசமாய் 'யாழ்நூல்' விளங்குகிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

அடிகளார் தமது தமிழ் வளர்ச்சிப் பாதையில் பலமுயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இயல், இசை, நாடகம் என்னும் வகையில் அடிகளாரின் தமிழ்பற்றிய சிந்தனைகளும்,செயற்பாடுகளும்அமைந்திருந்தன என்பதை அவரின் ஆக்கங்கள் புலப்படுத்தி நிற்கின்றன. "மதங்கசூளாமணி" நாடகத் தமிழினுக்கு அணிசெய்வதாக இருக்கிறது. இந்த நாடக நூலில் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் நாடகம் பற்றிய கருத்துகளும், நாடகம் பற்றிய உறுப்புகள் பற்றியும், ஆங்கில இலக்கிய மேதை சேக்ஸ்பியரின் நடகங்கள் பற்றியும், நாடகம் பற்றிய அறிஞர்களின் கருத்துகள் பற்றியும், இந்த நூலில் அடிகளார் எடுத்துக் காட்டுகிறார். நாடகம் எழுதிய அடிகளார் தமது கைவண்ணத்தில் - நடராஜ வடிவம், தில்லைத் திருநடனம், உமாமகேஸ்வரம், ஆகிய நூல்களை ஆக்கி தமது ஆன்மீகத் தாகத்தை வெளிப்படுத்துகின்றார். இப்படி எழுதியதால் நாவலர் பெருமான் வழியில் இணைந்துவிட்டாரோ என்று கருதிவிடல் கூடாது. அடிகளாரின் வசனங்களை இங்கு சிறக்கக் காணலாம். அடிகளாரின் மொழிபெயர்ப்பு முயற்சிகள் அவரின் வெளிப்படுத்தும் பாங்கிலே அமைந்திருக்கின்றன. ஆழ்வார்களின் பாடல்கள், திருவிளையாடற்புராணத்தில் சில பகுதிகள், சுவாமி விவேகானந்தரின் ஞான் சம்பாஷணை, ஞானோதயம், கருமயோகம், ஞானயோகம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, ஆகியவற்றுடன் இரவீந்திரநாத்தாகூரின் கவிதைகளை "பூஞ்சோலைக் காவலன்" என்றும், மில்ரனின் "சுவர்க்க நீக்கம்" பகுதியினை நெடும்பாடலாக தமிழிலும், ஆங்கிலவாணி என்பதையும் கொண்டு வந்து தமது மொழிபெயர்க்கும்

வல்லமையினால் தமிழுக்கு அழகூட்டி இருக்கிறார் அடிகளார். கலைச்சொல்லாக்க முயற்சியிலும், அடிகளார் தமது பதிவினை நிலைநாட்டி இருக்கிறார். 1938 ஆம் ஆண்டு சென்னைத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட "கலைச்சொல் அகராதி" அடிகளாரின் அகராதி முயற்சியினையும் தமிழ் வளர்ச்சிப் பாதையில் சேர்த்திருக்கிறது.

### தமிழ் வளர்ச்சிப் பாதையில் இருவரும்

நாவலர் பெருமான் வாழ்ந்த காலம் வேறு. அவரின் பின் எழுபது வருடங்கள் கடந்த பின்னர்தான் அடிகளார் வருகிறார். ஆறுமுகம் ஆறுமுகநாவலர் ஆகிறார். மயில்வாகனன் சுவாமி விபுலானந்தர் ஆகிறார். இருவரும் அன்னிய ஆட்சியில் வருகிறார்கள். நாவலர் பெருமான் சமயத்தைக் காத்திடும் காவலனாக, அன்னிய ஆட்சியில் தன்னைக் காட்டிக் கொள்ளுகின்றார். அடிகளார் சமரச சன்மார்க்க நெறிவழி நிற்கிறார். இருவருமே பன்மொழி கற்று பண்டிதர்களாகவே விளங்குகின்றனர். எழுத்தறிவிப்பதும், நூல்களை அச்சேற்றுவதும், போதனை செய்வதும் நாவலர் பெருமானுக்குத் தேவையாக இருக்கிறது. சமூகப் போராட்டம் நடத்தும் நிலைக்கு நாவலர் பெருமான் வருகிறார். அடிகளார் நாவலரைவிட கல்வியில் பட்டங்களைப் பெற்று உயர்கல்விப் பீடமாகிய பல்கலைக்கழகத்துடன் தன்னை இணைத்துத் தமிழ் வளர்ச்சியில் தடம் பதிக்கிறார். நாவலர் பெருமான் விவிலிய நூலினைத் தமிழில் மொழி பெயர்த்து தனது மொழிப்புலமையினை யாவரும் அறிந்திடச் செய்கிறார். அடிகளாரின் மொழி பெயர்ப்பு நாவலர் பெருமான் வழியில் செல்லாது வேறுவழியிலே அமைகிறது. இலங்கையின் வரலாற்றில் இருவரும் பெரும் போற்றுதலுக்கு உரியவர்களாக இருக்கிறார்கள் என்பது வெள்ளிடைமலையாகும். தமிழ்நாட்டாலும் மதிக்கப் பட்டார்கள். இலங்கைத் திருநாட்டாலும் மதிக்கப் பட்டார்கள். இலங்கை அரசாங்கம் இருபெரும் அறிஞர்களுக்கும் முத்திரையும் வெளியிட்டது. தமிழ் வளர்ச்சிப் பாதையில் அடிகளாரும், நாவலர் பெருமானும் தங்கள் பெருமுயற்சிகளினால் பதித்த தடத்தை தமிழர்களாகிய நாங்கள் தொட்டு வணங்கினால் எங்களுக்கும் தமிழ் உணர்வு இன்னும் மேலோங்கி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவிடச் செய்யும்" எண்ணம் மனதில் உறுதியாய் ஏற்படும் என்று கருதுகிறேன்.